## OS.No.255/2023, Dated 21.04.2026

The witness sworn under Oaths Act 1969 on this the day of 21st day of April 2026.

**வா.சா.1 – வெங்கடேசன் த/பெ. கிருஷ்ணமூர்த்தி வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் வந்தவாசி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திடில் ஏற்கனவே தாக்கல் செய்திருந்த அ.வ.எண்.78/2018 வழக்கை எதற்காக வாபஸ் வாங்கினேன் என்றால் அந்த வழக்கை வாபஸ் வாங்கி கொண்டு அந்த சொத்தை 1ம் பிரதிவாதி ராமலிங்கமிடமே விற்றுவிடலாம் என்று வாபஸ் வாங்கினேன். 17.06.2019ம் தேதி அன்று தாவா சொத்தை 1ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்வதாக கிரைய ஒப்பந்தமும் ஏற்படுத்தினேன் என்றால் சரிதான். என்னுடன் சேர்ந்து சில பொது நபர்களும் சாட்சி கையொப்பம் போட்டார்கள் என்றால் சரிதான். விற்பனை ஒப்பந்தத்தின்போது, ரூ.1 லட்சம் நான் முன்பணமாக வாங்கினேன் என்றால் சரிதான். அந்த விற்பனை ஒப்பந்தத்தில் மேற்படி முன்பண விபரமும் உள்ளது என்றால் சரிதான். மொத்த விற்பனை தொகையாக ரூ.6 லட்சம் முடிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். ரூ.1 லட்சம் முன்பணம் போக மீதி ரூ.5 லட்சம் கொடுக்க வேண்டும் என்று எழுதப்பட்டது என்றால் சரிதான். 2020ம் ஆண்டு மீதி பணம் ரூ.5 லட்சத்தை நான் அவரிடம் பெற்றுக்கொண்டுவிட்டேன் என்றால் சரியல்ல. சொத்தின் அனுபவத்தையும் அப்போதே அவரிடம் ஒப்படைத்து விட்டேன் என்றால் இல்லை. உடன் பிறந்தவர் என்பதால் பொறுமையாக பத்திரம் எழுதி வாங்கிக்கொள்ளலாம் என்று 1ம் பிரதிவாதி இருந்தார் என்றால் சண்டை சச்சரவானதால் அந்த நிலத்தை விற்பனை செய்யவில்லை என்று முடிவு செய்யப்பட்டது. எனக்கும் அவருக்கும் விரோதம் ஏற்பட்டு விட்டதால் அந்த நிலத்தை நான் கொடுக்க இயலாது என்று கூறிவிட்டேன் என்றால் சரிதான். மொத்த கிரைய தொகையையும் நான் வாங்கி விட்டேன் என்றால் சரியல்ல. காவல் நிலைய விசாரணைக்கு பின்னிட்டு தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். காவல் துறை

விசாரணையில் மொத்த கிரைய தொகையையும் நான் பெற்றுக் கொண்டுவிட்டதாகவும், கிரைய பத்திரம் எழுதி கொடுப்பேன் என்று ஒப்புக்கொண்டேன் என்றால் சரியல்ல. நான் அனுக்காவூர் சக்கரை ஆலை அருகே குடியிருக்கிறேன். ராமலிங்கம் மற்றும் சாந்தா இருவரும் கோட்டுப்பாக்கத்திலேயே குடியிருக்கிறார்கள். நான் வேலைக்கு செல்ல ஆரம்பத்ததிலிருந்து 33 ஆண்டுகளாக அனுக்காவூரில் நான் குடியிருக்கிறேன். தற்போதும் ராமலிங்கம் மற்றும் சாந்தா தான் அங்கு பயிர் வைக்கிறார்கள் அதனால் தான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். என்னை நிலத்தின் அருகிலேயே வரவிடாமல் அவர்கள் என்னை அடிக்கிறார்கள். அதனால் நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன். நிலம் இருக்கும் ஊருக்கு நான் மாதம் இருமுறை சென்று வருவேன். ஆனால் நிலத்தின் அருகே செல்ல மாட்டேன். நான் தான் பயிர் வைக்க வேண்டுமென்றும், அதனால் நிலத்தை என்னிடம் மாற்றி வாங்கிக்கொடுங்கள் என்று சொல்லி தான் நான் காவல் நிலையம் சென்றேன் என்றால் சரிதான். ஆனால் காவல் துறையினர் அவ்வாறு வாங்கி கொடுக்க இயலாது என்ற சொல்லிவிட்டார்கள் என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் என்னென்ன பரிகாரங்கள் கோரியுள்ளேன் என்றால் என்னுடைய நிலம் என்னிடம் வரவேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நிலத்தின் அனுபவத்தை பிரதிவாதிகளிடமிருந்து வாங்கி கொடுக்க வேண்டுமென்று வழக்கில் கோரியுள்ளேன் என்றால் இல்லை. நான் கிரைய தொகையை முழுவதும் வாங்கி கொண்டேன் என்பதற்கு ஊரில் சாட்சிகள் உள்ளனர் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து அனுபவத்தை பிரதிவாதிகளிடம் ஒப்படைத்து விட்டதால் அவர்கள் எப்போது வேண்டுமானாலும் ஏற்றுதல் ஆற்றுகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்ய முடியும் என்றால் சரியல்ல. தாவா சொத்து விலை ஏறிவிட்டதால் பிரதிவாதிகளிடம் அதிக பணம் பறிக்க வேண்டும் என்று இந்த பணத்தை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. பம்பு செட்டை இரண்டாம் பிரதிவாதியும் அவரது மகனும் உடைத்து

பயன்படுத்துகிறார்கள். காவல் நிலையத்தில் நீதிமன்றத்தை அனுகி பரிகாரம் தேடிக்கொள்ளும்ப அனுப்பி விட்டார்கள். இவ்வழக்கு பொய்யான வழக்கு என்பதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. தாவாவில் கோரப்பட்டுள்ள பரிகாரங்கள் சட்ட விரோதமானவை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2026.04.21 18:32:18 +0530

சார்புநீதிபதி
வந்தவாசி